[28th January 1961

Sri M. KALYANASUNDARAM : ரேடியோ வைத்ததன் விளைவாக பஸ்கள் விபத்துக்குள்ளான தகவல் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறதா? அப்படி இல்லையென்றால், பஸ்கள் ஓடும் சமயத்தில் வேண்டுமானால் ரேடியோக்களை வைக்கக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு பஸ்கள் நின்றுகொண்டிருக்கும்பொழுது ரேடியோக்கள் வைக்கலாம் என்ற அடிப்படையிலே ரேடியோ வைப்பதற்கு அனுமதி அளிக்கப்படுமா ?

The Hon. Sri V. RAMAIAH : இந்த விபத்துகள் பற்றிய புள்ளி விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதைக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன். பஸ்கள் ஓடும்போது ரேடியோ வைத்தால்தான் ஏதேனும் பிரயோசனமாக இருக்கும். நிற்கக்கூடிய நேரத்தில் ரேடியோவை முடுக்கிவிட்டால், அதை யார் கேட்பது என்று எனக்குப் புரியவில்லை. அடிக்கடி பஸ்கள் நிற்கக்கூடிய நேரத்தில் நான் பார்த்திருக்கிறேன். அங்கு பிரயாணிகள் போடுகிற சத்தமே போதும். அதோடுகூட ரேடியோ சத்தமும் சேர்ந்தால் அது பிரயாணிகளுக்கு அதிகமாக தொந்தரவு கொடுக்கும். ஆகையால் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுவதற்கு தயாராக இல்லை.

Sri P. G. MANICKAM : சர்க்காருடைய பஸ்களில் எத்தனை பஸ்களில் ரேடியோக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri V. RAMAIAH : எந்த பஸ்ஸிலும் ரேடியோ வைத்துக்கொள்ள முடியாது.

House-rent

*209 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have any proposal to bring a legislation to fix a ceiling on the income accrued from the letting of residential and non-residential buildings?

The Hon. Sri V. RAMAIAH : **No, Sir.**

Women village munsifs

*210 *Q.*—**Sri S. RAMALINGA PADAYACHI :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராம மணியக்காரர் (**Village Munisif**) வேலை பெண்களுக்குக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) இல்லையென்றால், காரணமென்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) At present women are eligible for appointment as village headmen if they possess the prescribed qualification for the post.

28th January 1961]

SRI S. RAMALINGA PADAYACHI : இதுவரையில் பெண்களுக்கு கிராம முன்சீப் வேலை கொடுத்ததாகத் தெரியவில்லை. அவர்கள் விதிவிலக்குக்கு உட்பட்டிருக்கிறார்களா? இனிமேலாவது அவர்களை விதிவிலக்கிலிருந்து தவிர்த்து அவர்களுக்கு கிராம முன்சீப் வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா, இனிமேலாவது அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : விதிவிலக்கு ஒன்றும் இல்லை. அவர்களுக்கு வேண்டிய யோக்கியதாம்சம் இருந்தால் அவர்களும் கிராம முன்சிப்பாக இருக்கலாம். இப்பொழுது 30 பெண்கள் ரிஜிஸ்டர் ஆகியிருக்கிறது. அவர்கள் மைனர்களாக இருக்கிறார்கள். அதோடு ஒரு பெண் கர்ணமாக இருக்கிறார்கள். இன்னொரு பெண் டெப்யூடி கர்ணமாக இருக்கிறாள். மூன்று பெண்கள் 'லாஸ்டு கிரேடு வில்லேஜ் ஸர்வண்ட்ஸ்' ஆக இருக்கிறார்கள். அதனால் ஒன்றும் தடை இல்லை.

Land tax

*211 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any decision has been taken to extend the basic land tax to all the districts of the State? 10–30 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : There is no such proposal under the consideration of the Government.

SRI T. S. RAMASWAMI : May I know what has happened to the assurance given by the Hon. Minister for Revenue during the discussion on Agricultural Income-tax Bill in this august Assembly?

THE HON. SRI M. A. MANICKAVELU : I do not think any assurance was given. If the hon. Member mentions what it is, I can tell.

SRI R. SRINIVASA IYER : The present ryotwari assessment, which is not a permanent assessment but a temporary one, was levied about 40 years ago. Is there any proposal by Government to revise the ryotwari assessment?

THE HON. SRI M. A. MANICKAVELU : The question is about basic land tax levied in Kanyakumari district and Shencottah taluk.

SRI R. SRINIVASA IYER : There is mention about extension "to all districts of the State". That is why I put my question.

THE HON. SRI M. A. MANICKAVELU : It is extension of the basic land tax to all districts of the State.

SRI V. SUBBIAH : இந்த நிலவரி வசூலிக்கும்பொழுது, கல்வி, ரோடு செஸ்களை நீக்கிவிட்டு, ஆதார நிலவரியாக இருக்கக்கூடிய நிலவரியை மட்டும் விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதற்குத் திட்டம் இருக்கிறதா?